2020 செப்டம்பர் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ் அவர்கள்.*

திரு. சே. கருணாஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அவையில் இருக்கக்கூடிய அமைச்சர் பெருமக்கள் அனைவரிடத்திலும், என்னுடைய பெயர் சொல்லுமாறும், அம்மாவினுடைய அரசினுடைய பெயர் சொல்லுமாறும் என்னுடைய திருவாடனை தொகுதியில் ஏதாவது ஒரு திட்டத்தைச் செய்து கொடுங்கள் என்ற வேண்டுகோளை தொடர்ந்து வலியுறுத்தியிருக்கிறேன். என்னுடைய திருவாடனை தொகுதி மிகவும் பிற்படுத்தப்பட்ட தொகுதியாகவும், வறட்சியான ஒரு பகுதியாகவும், தொழில் வளங்கள் இல்லாத ஒரு தொகுதியாகவும் இருக்கின்ற காரணத்தினால், வரக்கூடிய நாட்களில் தாங்கள் அனைவரும் இதற்கு உடன்பட்டு தங்களால் இயன்ற ஏதாவது ஒரு நலத் திட்டத்தை, மக்களுக்கான பணியை செய்ய வேண்டுகிறேன். கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்ட நேரத்தில் எனக்கு உறுதுணையாக இருந்து, அன்போடு என்னை அழைத்து என்னுடைய நிலையை அறிந்து, உடனடியாக சென்னை மருத்துவமனைக்கு வரவழைத்து, மாண்புமிகு அமைச்சர் டாக்டர் விஜய பாஸ்கர் அவர்களிடத்தில் சொல்லி, எனக்கு மருத்துவ உதவி செய்து கொடுத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், இந்த அரசிற்கும், அனைத்து மக்களுக்கும் குறிப்பாக தொகுதி மக்களுக்கும், நான் சார்ந்த முக்குலத்தோர் புலிப்படைக்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன், வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 14, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி, மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

14—

சட்டக் கல்லூரி

***69697—திரு. எம். தமிமுன் அன்சாரி:**

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2020 செப்டம்பர் 16

நாகப்பட்டினத்தில் சட்டக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாகப்பட்டினத்தில் புதிதாக அரசு சட்டக் கல்லூரி தொடங்கும் செயற்குறிப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி அவர்கள்.

திரு. எம். தமிமுன் அன்சாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி டெல்டா மாவட்டங்களில் மிக முக்கிய நகரான நாகப்பட்டினம் வரலாற்றுச் சிறப்புமிக்கது. தமிழின் ஐம்பெருங்காப்பியங்களில் இடம் பெறக்கூடிய சிறப்புமிக்க ஓர் ஊர். கடல் கடந்து தென்கிழக்கு ஆசியாவை வெற்றி கொள்வதற்கு சோழ மன்னர்கள் நாகப்பட்டினக் கடற்கரையிலிருந்துதான் புறப்பட்டுச் சென்றார்கள். ஆங்கிலேயர் காலத்திலும் வரலாற்றுச் சிறப்புமிக்க நகராக நாகப்பட்டினம் திகழ்ந்தது. அப்படிப்பட்ட வரலாற்றுப் பின்னணி கொண்ட நாகப்பட்டினத்தில் கல்வியறிவை பரவலாக்கும் நோக்கத்தோடு, டெல்டா மாவட்டங்களில் எங்குமே சட்டக் கல்லூரி இல்லாத நிலையில், ஒரு சட்டக் கல்லூரி அமைக்க இந்த அரசு முன்வருமேயானால், காவேரி டெல்டா மாவட்டங்களில் இருக்கக்கூடிய அனைத்து பகுதிகளைச் சேர்ந்த மக்கள் முழுமையாகப் பயனடைவார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எனது கோரிக்கையைக் கனிவோடு பரிசீலித்து அதற்கான முயற்சிகளை தயவுசெய்து மேற்கொள்ளுமாறு மீண்டும் ஒருமுறை கேட்டு அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–25

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தமிழகத்தில் 7 சட்டக் கல்லூரிகள் செயல்பட்டு வந்தன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு தமிழகத்தில் அரசு சட்டக் கல்லூரிகளின்

2020 செப்டம்பர் 16]

தேவையை உணர்ந்து, இதுவரை இல்லாத அளவிற்கு 6 சட்டக் கல்லூரிகளை வழங்கிய அரசு மாண்புமிகு அம்மாவினுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) விழுப்புரம், இராமநாதபுரம், தருமபுரி, தேனி, சேலம், நாமக்கல் மாவட்டங்களில் அந்த 6 சட்டக் கல்லூரிகளை அமைப்பதற்காகத் தேர்வு செய்யப்பட்ட இடங்கள் மிகவும் பிற்படுத்தப்பட்ட இடங்கள். பிற்படுத்தப்பட்ட இடங்கள் தேர்வு செய்யப்பட்டது மட்டுமல்ல, ஒவ்வொரு சட்டக் கல்லூரிக்கும் இதுவரை இந்தியாவிலேயே இல்லாத அளவிற்கு ரூ.100 கோடி மதிப்பில் உருவாக்கிட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தனியார் கல்லூரியான TATA Institute of Law College-ஐவிட மிகப் பெருமை வாய்ந்த சட்டக் கல்லூரிகளாக, கட்டடங்கள் கட்டப்பட்டு, இன்றைக்கு சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. தமிழகத்தில் இன்றைக்கு 14 அரசு சட்டக் கல்லூரிகள் இயங்கிவருகின்றன. அதுமட்டுமல்லாமல், சென்னையில் சீர்மிகு சட்டக் கல்லூரியும், ஸ்ரீரங்கத்தில் தேசிய சட்டப் பள்ளி, நாகப்பட்டினத்திற்கு அருகில் உள்ள மாவட்டமான திருச்சியில் ஓர் அரசு சட்டக் கல்லூரியும் தற்போது செயல்பட்டு வருகின்றன. ஆகவே, எதிர்காலத்தில் தேவையின் அடிப்படையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசீலனை செய்யப்படும். அதுமட்டுமல்லாமல், தற்போது சட்டக் கல்லூரிகள் இல்லாத மாவட்டங்களில் சட்டக் கல்லூரிகளைத் தொடங்க தனியார் யாராவது முன்வந்தால் அங்கு சட்டக் கல்லூரிகளைத் தொடங்குவதற்கு அரசு அனுமதி கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறது. அப்படி யாரேனும் முன்வருபவர்கள் நாகப்பட்டினம் மாவட்டத்தில் இருந்தால் சட்டக் கல்லூரியைத் தொடங்க அனுமதி வழங்குவதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி அவர்கள்.

திரு. எம். தமிமுன் அன்சாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் எனது கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்றும், தனியார் யாரேனும் சட்டக் கல்லூரி தொடங்க முன்வந்தால் அதற்கான வாய்ப்பும் வழங்கப்படும் என்றும் சொன்னார்கள். இரண்டும் இனித்தாலும், முதலில் 'பரிசீலிக்கப்படும்' என்று அவர்கள் சொன்ன கருத்து

அதிகமாக இனிக்கின்ற காரணத்தினாலே, அந்த முதல் கனியை எங்களுக்குத் தந்தால் நாங்கள் மிகுந்த மகிழ்ச்சியடைவோம். காவேரி டெல்டா பகுதியைச் சேர்ந்த அனைவரும் மகிழ்ச்சியடைவார்கள் என்பதைக் கூறி, மீண்டும் என்னுடைய கருத்தை வலியுறுத்தி, நம்பிக்கையளிக்கக்கூடிய பதிலைத் தந்தமைக்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 15, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

15—

நெல் கொள்முதல் நிலையத்திற்குக் கட்டடம்

***24493—திரு. எம். இராமச்சந்திரன்:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒரத்தநாடு தொகுதி, ஒரத்தநாடு வட்டம், தும்பத்திக்கோட்டை ஊராட்சியில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: *சிறப்பு வாய்ந்த இந்த அவையினை சீரிய முறையில் நடத்திக்கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரண சூழ்நிலையில் பணியாற்றுவது என்பது ஒன்று; அசாதாரண சூழ்நிலையில்*